பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 29 | ஞாயிற்றுக்கிழமை | 14.12.2025 | அதிர்வு 136


## சர்வதேச உதவிகளில் மோசடி இடம்பெறாது!

**ஓமல்பே சோபித தேரர் நம்பிக்கை**



இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்குக் கிடைக்கப் பெறும் சர்வதேச உதவிகள் முறைகேடாகப்

06




# வடக்குக்குத் தேவையான நிதியை வழங்கத் தயார்!

## பேரிடர் குறித்த மன்னார் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

*(எஸ்.ஆர்.லெம்பேட்)*

**“பேரிடர் காரணமாக வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட உள்ளூர் வீதிகளைத் திருத்துவதற்குத் தேவையான நிதியை வடக்கு மாகாண சபைக்கு வழங்குவதற்கு அரசு தயாராக உள்ளது. அத்தியாவசியத் தேவையாகக் காணப்படும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பதே எமது தற்போதைய முக்கிய இலக்காகும்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

06

# வடக்கு மீனவர்களின் உரிமைகளை இழப்பதற்கு இடமளிக்கவேமாட்டோம்

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் கருத்துக் கூறியபோது ஜனாதிபதி இப்படி உறுதி

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடக்கு மீனவர்களின் உரிமைகளை இழப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியாகத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மன்னார் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மீன்பிடித்துறை தொடர்பில் நீண்ட நேரம்

06






யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு கட்டும் நடவடிக்கைக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடைக் கட்டளை வழங்கியுள்ள பின்புலத்தில், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு குந்தகம் இல்லாமல் சில விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக அல்லது நடவடிக்கைக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்து, வெளியில் நடைபவனிகள் மேற்கொண்டு, சமூக ஊடகங்களில் கருத்து வெளியிடுபவர்களுக்கு ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் ஒரு முடிவான தீர்ப்பை இன்னமும் எடுக்கவில்லை. விவகாரத்தை அது முழுமையாக விசாரிக்க விரும்புகிறது. அது மாத்திரமல்ல, அப்படி விசாரிக்கும் போது இந்த விடயத்துடன் தொடர்புடைய ஒவ்வொருவரும் – இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் – விரும்பினால் நேரடியாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகி தமது கருத்தை தெரிவிப்பதற்கான வாய்ப்பை நீதிமன்றம் திறந்தே வைத்திருக்கின்றது.

06





# முல்லைத்தீவு மத்திய பஸ் நிலையத்தின் இறுதிக் கட்டப்பணிக்கு நிதி ஒதுக்கீடு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மத்திய பஸ் நிலையத்தின் இறுதிக் கட்ட வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நகர அபிருத்தி அதிகார சபையினால் ரூபா 42 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

முல்லைத்தீவு மத்திய பஸ் நிலைய முதற்கட்ட கட்டுமானப் பணிகள் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன எனினும் நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக தடைப்பட்டிருந்த 2 ஆம் கட்டப் பணிகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்நிலையில் இறுதிக்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த வருட நடுப்பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது

முல்லைத்தீவு மாவட்ட வெள்ள அனர்த்த பாதிப்புக்கள் தொடர்பான நிலைமைகளை பார்வையிடுவதற்காக களவிஜயம் மேற்கொண்ட நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஏரங்க குணசேகர முல்லைத்தீவு மத்திய பஸ் நிலையத்தையும் பார்வையிட்டார்.

இதன் போது முல்லைத்தீவு மத்திய பஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக பணிகள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனினால் பிரதி அமைச்சரிற்கு விவரிக்கப்பட்டது. இக் களவிஜயத்தின் போது வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.திலகநாதன் , துரைராசா ரவிகரன் மற்றும் நகர அபிருத்தி அதிகார சபை பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.













# ஒன்றாக முன்னோக்கி

# கமநல சேவைகள் நிலையங்களில் இலவச உரம் வழங்குவதில் கெடுபிடி

(த.சுபேசன்)

கமநல சேவைகள் நிலையங்களில் இலவசமாக வழங்கப்படுகின்ற நெற்செய்கையாளர்களுக்கான இலவச ஆழ்ஈ உரம் வழங்கும் நடைமுறையில் உள்ள சில இறுக்கமான நடைமுறைகள் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக சிரமங்களை எதிர்நோக்கும் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில் –

குறிப்பாக வயது முதிர்ந்த விவசாயிகள்,பெண்கள், உத்தியோகத்தர்கள் தமது பிள்ளைகளைஃநெருங்கிய உறவுகளை உரிய ஆவணங்களுடன் (தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரிச் சிட்டை மற்றும் சந்தாப்பணச் சிட்டை) ஆகியன சகிதம் இலவச உரத்தினைப் பெற அனுப்பும் போது கூட அங்கேயுள்ள உத்தியோகத்தர்களினால் வயலுக்கு உரித்தானவர் வருகை தராமல் உரம் வழங்க முடியாது என்ற இறுக்கமான நடைமுறை பின்பற்றப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர். இதனால் வயது முதிர்ந்த விவசாயிகள்,பெண்கள், உத்தியோகத்தர்களான நெற் செய்கையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மிகக் குறைந்தளவான இலவச உரத்திற்கு கூட நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

குறிப்பாக, இந்த இறுக்கமான நடைமுறை கைதடி கமநல சேவை நிலையத்தில் காணப்படுகின்றது.

தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் நெல் வயல்கள் உள்ள விவசாயிகள் கைதடி கமநல சேவை நிலையத்தை நாடும்போது இந்தச் சிக்கலை எதிர்கொள்கின்றார்கள்.

முதியவர்கள், பெண்கள், உத்தியோகத்தர்கள் வயலுக்கு உரித்தானவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தமது நெருங்கிய இரத்த உறவினர்களை உரிய ஆவணங்களுடன் அனுப்பும் போது கூட, அவர்களுக்கு உரம் வழங்காத சூழ்நிலை காணப்படுகின்றது.

பிள்ளைகளை அனுப்பிய சந்தர்ப்பங்களில் கூட அவர்களைத் திருப்பி அனுப்பிய நிலை உள்ளது.

பரப்பிற்கு 400கிராம் என்ற அடிப்படையில் மேற்படி இலவச உரம் வழங்கப்படுகின்றது. சிலர் 10 பரப்பு வயலுக்கு நேரம் செலவழித்து அங்கு செல்லும்போது இவ்வாறு திருப்பி அனுப்பப்படுகின்றமையால் விவசாயிகள் அதிருப்தி அடைகின்றனர்.

எனவே, இந்த நடைமுறையில் தளர்வினை ஏற்படுத்தி, உரிய ஆவணங்களுடன் செல்லும்போது அவர்களுக்கான இலவச உரத்தை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.





# சிலாபம் கடல் பிரதேசத்தில் கடற்படையினர் 1,740 கிலோ பீடி இலைகளைக் கைப்பற்றினர்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

சிலாபம் கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் கடந்த புதன்கிழமை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, நாட்டிற்குள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட சுமார் ஆயிரத்து எழுநூற்று நாற்பது கிலோகிராம் பீடி இலைகளைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

மேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் ரங்கலவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், புதன்கிழமை மாலை சிலாபம் கடல் பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அந்தக் கடல் பகுதியில் கைவிடப்பட்ட ஐம்பத்தைந்து பைகள் பரிசோதிக்கப்பட்டன. இதன் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட ஆயிரத்து எழுநூற்று நாற்பது பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி நடவடிக்கையின் மூலம் கடற்படையால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுகத்தில் உள்ள சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.





# முறைகேடான நிவாரண விநியோகத்துக்கு எதிராக நீதி கேட்டு பாலமீன்மடு மக்கள் போராட்ட முஸ்தீபு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பாலமீன்மடு பிரதேசத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாகக் குற்றச்சாட்டு தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்கள் கிராம உத்தியோகத்தருக்கு எதிராக நேற்று சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட முயற்சித்தனர். உடனடியாக, பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தலையீடு செய்து, எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் நிவாரணம் வழங்குவதாக உறுதி மொழி வழங்கியமையை அடுத்து போராட்ட முஸ்தீபு கைவிடப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள பாலமீன்மடு கிராம சேவகர் பிரிவில் 410 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. கடந்த வெள்ள அனர்த்தத்தினால் இந்த பகுதியில் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்தது. பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. அந்த மக்கள் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

அந்தப் பகுதியில் பதில் கடமையாற்றி வந்த கிராம உத்தியோகத்தர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு இருந்த போதும் அந்த பகுதி மாநகர சபை உறுப்பினர் ஒருவரின் சிபார்சில் 26 பேருக்கு மட்டும் வீட்டுப் பாதிப்புக்கு 25 ஆயிரம் ரூபாவும் நிவாரணம் வழங்கியுள்ளார்.

இதனை ஆட்சேபித்து, உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவில்லை எனத் தெரிவித்து, அதற்கு நீதி கோரி, நூற்றுக்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று சனிக்கிழமை கிராம அபிவிருத்தி சங்க கட்டடப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் நேக்குடன் ஒன்று திரண்டனர். இதையடுத்து கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சகிதம் சென்று அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது மக்கள், "இந்தப் பகுதி முற்று முழுதாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. இது, முகத்துவாரம் கடல் மற்றும் களப்புப் பகுதியை அண்டியது. மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வரும் இந்த கிராமத்தவர்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து பாதிக்கப்பட போதும், மாநகர சபை உறுப்பினர் தானும் அவர் சார்ந்த 25 பேர் உட்பட 26 பேர் மட்டும்தான் பாதிக்கப்பட்டனர் எனத் தகவல் வழங்கி 25 ஆயிரம் ரூபா மற்றும் நிவாரணத்தை பெற்றுள்ளார் என்று மக்கள் கூறினர்.



இந்த 26 பேரில் பலர் பாதிக்கப்படாதவர்கள். இது ஒரு முறைகேடு. பிழையானது. உண்மையில் பாதிக்கப்பட நாங்கள் இருக்கும்போது இவ்வாறு கிராம உத்தியோகத்தர் பிழையாக செயல்பட்டுள்ளார். எனவே பாதிக்கப்பட்ட எங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இல்லாவிடில் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டுப் போராடுவோம் என அவர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்து அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டது. நிர்வாக உதஜதியோகத்தர் நிலைமையை விளக்கினார். "பிரதேச செயலாளரே இங்கு வருவதாக இருந்தார். திடீரென அரசாங்க அதிபர் கூட்டத்துக்கு அழைத்தமையால் வரமுடியாது போயுள்ளது. சில தவறுகள் நடந்துள்ளன. கிராம உத்தியோகத்தர் இந்த பிரிவுக்கு பதில் கடமைக்காக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் நியமித்தோம். அவர் இதற்குப் புதியவர். எனவே அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் நிவாரணம் வழங்குவோம்" – என அவர் உறுதி மொழி வழங்கினார்.

அடுத்து மக்கள் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நிவாரணம் வழங்காவிட்டால் நாங்கள் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்து, போராட்டத்தைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறினர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது மட்டுமல்ல, அப்படிக் கருத்து கூறுபவர்களை அழைப்பதற்கான விளம்பரத்தை கூட பிரசுரிப்பதற்கு நீதி மன்றம் கட்டளையிட்டிருக்கின்றது.

ஆகவே சமூக ஊடகங்களில் நீதி மன்ற உத்தரவுக்கு எதிராக திட்டித் தீர்த்து, கங்கணம் கட்டி நிற்பவர்கள் நேரடியாக நீதிமன்றில் முன்னிலையில் தாங்களாகவோ அல்லது தங்கள் சட்டத்தரணி மூலமோ நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்புக்கள் திறந்தே இருக்கின்றன. அதனைச் செய்யாமல் வெளியில் நின்று சின்னத்தனமாக அரசியல் செய்வது பொருத்தமற்றது என்பதை முதலில் சுட்ட விரும்புகிறேன்.

இந்த விடயத்தில் வழக்காளி தரப்பில் நியாயம் உள்ளதா அல்லது உள்ளக விளையாட்டு அரங்கைக் கட்டுவதில் முனைப்பாக இருக்கும் தரப்புகளின் பக்கத்தில் நியாயம் இருக்கின்றதா என்பதை விரிவாக விசாரித்து நீதியை நிலை நாட்டுவதற்கு நீதிமன்றம் தயாராக இருக்கும்போது அதற்கு வெளியில் ஆரவாரம் இடுவது பொருத்தமற்றது.

இந்தப் பழைய பூங்கா அமைந்துள்ள இடம் அரச சொத்தல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இது 1829 தொடக்கம் 1833 வரை வடக்கில் முதலாவது அரசாங்க அதிபராக இருந்த சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் அவர்களுடைய தனிப்பட்ட சொத்து. அதனை 1846, 1852, 1867 ஆகிய மூன்று ஆண்டுகளில் வெவ்வேறு உறுதிகள் மூலம் அவர் இலங்கை மக்களுக்காக நன்கொடை ஆதனமாக வழங்கியிருக்கிறார்.

இந்த தர்ம நம்பிக்கை சொத்தின் மூலம் இந்த ஆதனத்தில் பூங்கா அமைத்து பறவைகள் சரணாலயம் ஆக இருப்பதற்கு வழி சமைத்து கொடுத்தார் அவர்.

இந்த ஆதனம் நான் முன்னரும் ஒரு தடவை சுட்டியமை போல 1990 - 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் குடாநாடு இருந்தபோது கூட இயற்கைச் சூழல் குலையாமல் கட்டிக் காத்துப் பாதுகாக்கப்பட்டது.

எனினும் அதன் உரித்துத் தொடர்பான பதிவுகள் தெளிவாக இல்லாததால் யாழ். அரச அதிபரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த ஆதனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பல அரச கட்டமைப்புகள் வாடகை கூடச் செலுத்தாமல் கட்டடங்கள் கட்டி நிலைகொள்ளத் தொடங்கின.

எனினும், கடைசியாக கடந்த ஜூன் மாதத்தில் இந்தக் காணிகளை - ஆதனங்களை - உள்ளடக்கி நம்பிக்கை பொறுப்பு உறுதி முடிக்கப்பட்டது. அதனால் அன்றைய தினத்திலிருந்து இந்த ஆதனம் சட்டத்தின் கீழான நம்பிக்கை பொறுப்பு விவகாரமாக மாறிவிட்டது. அதனால் இதற்கு முந்தைய காலங்களில் கட்டப்பட்ட கட்டடங்களை தடுத்து நிறுத்த முடியாத நிலை இருந்தாலும், இப்போது இந்தக் காணிகள் முழுமையாக நம்பிக்கை நிதியப் பொறுப்பின் கீழ் வந்துவிட்டதனால், அது தொடர்பான நம்பிக்கை நிதிய சட்டங்களின் கீழ் அதனைக் கையாளக்கூடிய சட்ட ரீதியான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்த ஆதனத்தில் முன்பு கட்டடங்கள் கட்டப்பட்ட போது எங்கே போயிருந்தீர்கள் என்று இப்போது சமூக ஊடகங்களில் விதண்டாவாதம் செய்பவர்கள், இந்த ஆதனம் சட்ட ரீதியாக நம்பிக்கை நிதிய சட்டங்களின் கீழ் கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தான் உறுதி முடிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை கவனிக்க வேண்டும். அதனால்தான் இப்போதாவது நீதிமன்றத்தில் முன்னிலையாகி மேலும் கட்டுமானங்கள் முன்னெடுக்க முடியாமல் தடை விதிக்கும் முயற்சி எடுக்கப்பட்டு இருக்கின்றது.

அது மாத்திரமல்ல, இந்த புதிய உறுதி மூலம் நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளர்களின் ஒருவராக - தலைவராக - பதவி வழியாக வந்திருக்கும் யாழ் அரசு அதிபர் கடந்த ஜூன் 20 இல் நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் இதேபோன்று இங்கு திறந்தவெளி அரங்கம் ஒன்று, நீச்சல்தடாகம் ஒன்று போன்றவை அமைக்க இடமளிக்கும்படி கோரிக்கை எழுந்த போது இந்த காணியை வேறு எவருக்கும் வேறு தேவைகளுக்கு வழங்குவதில்லை என்ற முடிவை எடுத்து அறிவித்திருந்தார்.

அப்படி இருக்க, அவரே இப்போது அந்த நம்பிக்கை நிதியத்தின் பொறுப்பாளராக இருந்து கொண்டு, தன்னுடைய தலைமையில் எடுக்கப்பட்ட முன்னைய முடிவுக்கு மாறாக, அந்த ஆதனத்தை அது வழங்கப்பட்ட நோக்கத்துக்கு மாறாக, பறவைகள் சரணாலயம், பிராணிகளின் இருப்பு, நூறு, நூற்றித் தொண்ணூறு வருடங்கள் பழமையான விருட்சங்கள் போன்றவற்றை அழிக்கும் விதத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி அளித்திருக்கின்றார் என்ற கருத்தில் இந்த வழக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரத்தில் 'சின்னத்தனமான' அரசியலுக்காக வெளியில் இருந்து குசும்புத்தனமான விமர்சனங்களை செய்வதை விடுத்து, தம்பக்கத்தில் கருத்திருந்தால் - நியாயம் இருந்தால் - நீதி இருந்தால் - அவற்றை நீதிமன்றில் நேரடியாகத் தெரிவித்து அதற்கு நிவாரணம் தேடுவதுதான் பொருத்தமாக இருக்கும் - வெளியில் அரசியல் ஆரவாரங்கள் காட்டுவதை விடுத்து.

---

## வடக்கு மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆராயப்பட்டது. புயல் காரணமாகத் தொழிலுக்குச் செல்லாத மீனவர்களுக்கு இது வரை எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டதை யடுத்து, அவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, "எமது கடல் வளத்தைப் பாதுகாக்கக் கடற்படை நடவடிக்கை எடுத்து வரும் அதேவேளை, இது இராஜதந்திர ரீதியிலும் கையாளப்பட வேண்டும். வடக்கு மீனவர்களின் உரிமைகளை இழப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்." - என்று உறுதியாகத் தெரிவித்தார்.

---

## சர்வதேச உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்தப்படமாட்டாது என்ற நம்பிக்கை உள்ளது என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த காலங்களில் நடந்த கசப்பான அனுபவங்கள் எமக்கு உள்ளன.

சுனாமி மற்றும் கொரோனா காலகட்டங்களின்போது கொள்ளைகள் இடம் பெற்றன. அரசியல்வாதிகள் மோசடிகளில் ஈடுபட்டு தமது சொத்துகளைப் பெருக்கிக்கொண்டனர்.

இதனால் நாடு மீண்டெழ இருந்த சந்தர்ப்பம் இல்லாமல்போனது. எனினும், இந்த ஆட்சியில் அப்படி நடக்காது என்ற நம்பிக்கை உள்ளது.

கிடைக்கும் வெளிநாட்டு உதவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மோசடி இல்லாமல் சென்றடையும்." - என்றார்.

---

## வடக்குக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னார் மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட செயலகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதி அமைச்சரும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஆகியோர் வரவேற்றனர்.

வரவேற்புரையைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அனர்த்தத்தின் போது அரச அதிகாரிகள் ஆற்றிய பணிகளைப் பாராட்டினார். "பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான முதற்கட்ட உதவிகளை நீங்கள் வழங்கியுள்ளீர்கள். தற்போது அவர்களின் வாழ்வாதாரத் துறைகளான விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதிலும், உட்கட்டுமானங்களை மீளமைப்பதிலும் எமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்." - என்று தெரிவித்தார்.

இதன்போது ஒவ்வொரு துறை சார்ந்தும் ஜனாதிபதி விரிவாக ஆராய்ந்தார். வீதி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்திய அவர், மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள வீதிகள் மற்றும் அவற்றுக்கான நிரந்தரத் திருத்த மதிப்பீடுகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், மன்னார் மாவட்டத்தின் வெள்ள நீர் கடலைச் சென்றடைவதற்கான வடிகால் வாய்க்காலின் அளவு போதாமையாக உள்ளமை குறித்து ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணிப்புரை விடுத்தார்.

மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் விநியோகம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வழங்குவதில் நிலவும் சிரமங்கள் மற்றும் தாமதங்கள் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகக் கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டு மக்களுக்கு என்பதையும், தொலைத்தொடர்பு வசதிகள் மீளமைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் அதிகாரிகளிடம் வினவினார்.

நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத் துறை குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, பெரும்போகத்துக்கான நீர் விநியோகம், மீள்விதைப்புக்கான ஆயத்தங்கள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலப்பரப்புகள் குறித்துக் கேட்டறிந்தார். நிவாரணக் கொடுப்பனவுகள் மக்களைச் சென்றடைவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் அவர் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

மரக்கறி மற்றும் தானியச் செய்கை அழிவுகள் தொடர்பிலும், குறிப்பாக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களின் இழப்புகளுக்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும் ஜனாதிபதி வினவினார்.

இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், அடுத்த ஆண்டு வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கவும்,

07

# அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தகவல்களை பகிர வேண்டாமென எச்சரிக்கை

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான தகவல்களைப் பகிர வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புகைப்படங்கள், காணொளிகள் அல்லது தனிப்பட்ட விபரங்களை சமூக ஊடகங்களில் அல்லது பிரதான ஊடகங்களின் மூலம் பகிர்வதைத் தவிர்க்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தகைய செயற்பாடுகள், சிறுவர்களின் அடையாளம் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம் என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், அந்த புகைப்படங்கள் மற்றும் விபரங்கள் கடத்தல்காரர்கள் மற்றும் பிற குற்றவாளிகளின் கைகளில் சென்று தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கலாம்.

இந்த நிலையில், சிறுவர்களை சுரண்டுதல் மற்றும் ஆட்கடத்தல் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதற்கு அத்தகைய தகவல்களைப் பயன்படுத்தும் தனிநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறுவர் விவகார அமைச்சு எச்சரித்துள்ளது.

அத்துடன், அத்தகைய சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது அத்தகைய கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து தகவல்கள் இருந்தால், 1929 சிறுவர் உதவி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறும் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இல்லையேல், அருகிலுள்ள பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரி அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகாரிக்கு இது குறித்து அறிவிக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் நல்வாழ்வை உறுதிசெய்து, அவர்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

# சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு




இலங்கையில் திட்டமிட்ட குற்றவாளிகளால் சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்களைத் தடை செய்வதற்கும், அவற்றை அரசுடைமையாக்குவதற்குமான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், எஃப். யூ.வுட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த மற்றும் நடப்பு ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் 354 பவுண் தங்கம், 77 வாகனங்கள், 35 கோடி ரூபா பணம் மற்றும் நூறு கோடிக்கும் அதிக பெறுமதியான பல்வேறு சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதில் 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் 150 பவுண் தங்கம், 64 வாகனங்கள், 6 கோடி ரூபா பணம் மற்றும் 61 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குத் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, இந்த ஆண்டில் இதுவரை 204 பவுண் தங்கம், 13 வாகனங்கள், 67 கோடியே 78 லட்சம் ரூபா பெறுமதியான காணி மற்றும் ஏனைய சொத்துக்கள், மற்றும் 18 வீடுகள் எனச் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட பெருமளவிலான சொத்துக்களை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்குக்குத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

குறுகிய காலத்தில் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மாகாண விவசாய அமைச்சு ஏற்கனவே முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கால்நடை இழப்பீடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, பதிவு செய்யப்படாத கால்நடைகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குத் தனியான பொறிமுறை அவசியம் எனச் சுட்டிக்காட்டினார். பதிவு செய்யப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை உடனடியாக வழங்குமாறும், பதிவு செய்யப்படாதவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்போது முறைகேடுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்யுமாறும் அவர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். மேலும், நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நெற்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 25,000 ரூபா கொடுப்பனவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான நிவாரணங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

எதிர்வரும் டிசம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் நிவாரணப் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என அவர் உத்தரவிட்டார். இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பாடசாலைப் புத்தகங்கள் அழிவடைந்துள்ளமை குறித்து வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி அது தொடர்பில் தனது அவதானத்தை செலுத்தினார்.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகள், அபாய வலயங்களில் வசிப்போரை மீள்குடியேற்றுதல் மற்றும் நிவாரண உதவிகள் பகிர்ந்தளிப்பு குறித்தும் ஜனாதிபதி தெளிவான வழிகாட்டல்களை வழங்கினார்.

இறுதியாகச் சுகாதாரத் துறை குறித்து வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கமளித்தார். வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையிலான முன்னாயத்தக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்பாடுகள் காரணமாகப் பேரிடரால் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை எனவும், ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சின் உதவிகள் உரிய நேரத்தில் கிடைத்தன எனவும் அவர் தெரிவித்தார்.

வெள்ளஅனர்த்தவேளைகளில்நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு ஏற்ற விசேட உயரமான அம்புலன்ஸ் வாகனம் மற்றும் அம்புலன்ஸ் படகுத் தேவையை அவர் முன்வைத்தார். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, உடனடித் தீர்வுகள் குறித்தும், எதிர்கால நீண்டகாலத் தீர்வுகள் குறித்தும் கவனம் செலுத்துவதாக உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேசத்தின் குரல்

ஈழத் தமிழினத்தின் சுதந்திரத்திற்காக இடம்பெற்ற நீண்ட, நெடிய போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் பங்கு மிகவும் காத்திரமானது. வரலாற்றுப் பேரெழுச்சியாக விஸ்வரூபம் எடுத்து சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேல் நீண்ட அந்தப் போராட்டம், இரண்டு தளங்களில் கட்டவிழ்ந்தது.

ஒருபுறம் - நினைத்தே பார்க்க முடியாத பெரும் ஈகத்துடன் முன்னெடுக்கப்பட்ட துணிச்சலும், தியாகமும், வீரமும் மிக்க ஆயுதப் போராட்டம். மறுபுறம் - தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் பேச்சுக்கள் மூலம் அமைதி மேசைகளில் நடைபெற்ற சமாதான முயற்சிகள்.

இதில் பின்னையதில் மிக முக்கிய பங்களித்த விடுதலை புலிகளின் மதியுரைஞர் - அரசியல் வழிகாட்டி - தத்துவஞானி - ராஜதந்திரி - சிந்தனைவாதி - 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம், வெறுமனே அரசியல் ராஜதந்திரியாக மாத்திரம் செயற்படாமல் ஆயுதப்போராட்டம் நெருக்கடிகளைச் சந்தித்த சமயங்களில் எல்லாம் அதிலிருந்து போராட்டத்தையும் இயக்கத்தையும் தமது தமிழ் மக்களையும் மீட்டு, முன்னோக்கி நகர்த்துவதற்கான பின்புற அரசியல் ராஜதந்திர காய் நகர்த்தல்களையும் தமக்கே உரிய சமயோசித வழிகளில் முன்னெடுத்து இனத்திற்கான தம்பணியை திறம்பட நிறைவேற்றியவர்.

அவரது 19ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று ஆகும்.

தமிழீழப் போராட்டத்தில் அவர் ஒரு பிதாமகர், தலைமகன் என்று புலிகளின் தலைவர் பிரபாகரனே அவரது பிரிவையொட்டி தாம் வெளியிட்ட அஞ்சலி உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்லர் என்று குறிப்பிடும் தலைவர் பிரபாகரன் ''எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும், வேதனைகளையும், சவால்களையும், சங்கடங்களையும் தாங்கிக் கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னால் நின்று செயற்பட்டவர். ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேச சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்தியவர் பாலாண்ணை'' என்று பாலசிங்கத்தின் பிரிவுத் துயரத்தின் சுமை தன் ஆன்மாவை அழுத்த குறிப்பிடுகின்றார்.

சர்வதேசத்தின் ஆதரவை ஈழத் தமிழர்களின் பக்கம் திருப்பும் மிகச் சங்கடமான பணியை தமக்கேயுரிய தனித்துவ ஆற்றல் மூலம் செவ்வனே முன்னெடுத்து பலரையும் வியப்பில் ஆழ்த்தியவர்.

உயர்ந்த சிக்கல் நிறைந்த, விளங்கிக் கொள்ள சிரமமான தந்துவங்களை, சித்தாந்தங்களை எளிய தமிழில் - இலகு சொல்லடுக்குகளில் - எமக்குப் பரிச்சயப்படுத்தியவர்.

ஈழத் தமிழர்களின் கடந்த ஐந்நூறு வருட சரித்திரத்தில் அவர்கள் மத்தியில் இருந்து - அவர்களுக்காக - வெற்றிகரமாக முகிழ்ந்த ஒரே ஒரு ராஜதந்திரி அன்ரன் பாலசிங்கம் மட்டுமே என்றால் அது மிகையாகாது.

தனது ஆயுதப் போரியல் வலுவையும், அதனால் பேரம்பேசும் வலிமையையும் இழந்து தன் உரிமைகளை நிலைநாட்ட முடியாமல் பலமிழந்து தடுமாறி நிற்கும் தமிழினத்திற்கு இன்று ஒரே பக்கபலமாகவும் துணையாகவும் நிற்கக்கூடிய சக்தி சர்வதேச பின்புல ஆதரவு மட்டும்தான். அதனை நமக்குச் சாதகமாகத் திருப்புவதன் மூலம் மட்டுமே நமது இனம் இந்த நீண்ட போராட்டத்தின் பயனை - விளைவை - தீர்வை - பெற்றுக் கொள்ள முடியும். அப்படி சர்வதேசத்தை நமது பக்கம் திருப்புவதற்காக பாலசிங்கம் போன்ற ஒரு ராஜதந்திரி இன்று தேவைப்படுகிறார். அது பற்றி தமிழினம் சிந்திப்பது தான் இப்போதைய சந்தர்ப்பத்திற்கு பொருத்தமானது.




# முத்தையன்கட்டு குளத்தில் தற்போதுவரையில் எந்த விதமான ஆபத்தான நிலையும் இல்லை

(பா.சதீசன்)

முத்தையன்கட்டு குளத்தில் தற்போதுவரை எந்தவித ஆபத்தான நிலையும் இல்லை என நீர்பாசன திணைக்களமும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகும் நேற்று பொதுமக்களுக்கு அறியத் தந்துள் ளன.

முத்தையன்கட்டு குளம் தொடர்பாக பொதுமக்களுக்கான முக்கிய அறிவிப்பு என்ற பெயரில் நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

முத்தையன்கட்டு குளத்தின் வான் பாயும் (Spillway) பகுதியின் இருபக்கமும் காணப்படும் வான்பாயும் நீரை சீராக்கும் கட்டில் (Training bund) ஏற்பட்டுள்ள உடைப்பைச் சீர் செய்வதற்காக, பாதுகாப்புப் படைகள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் திருத்தப் பணிகளை நீர்பாசன திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

■ தற்போதைய மழையின் காரணமாக குளம் நிரம்பிய நிலையில் காணப்படுவதனால், நீரை வெளியேற்றிக் கொண்டு நிரந்தரமான கட்டுமானப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

■ இதன் காரணமாக, தற்காலிகமாக வான் பகுதியில் உடைப்பெடுத்த பக்கமாக நீர் வெளியேறுவதைத் தடுப்பதற்காக வான்பாதையின் ஒருபகுதி மண் மூடைகளால் மறிக்கப்பட்டு, இரண்டு கதவுகள் திறக்கப்பட்டு குளத்தின் நீர்மட்டம் குறைக்கப்பட்டு வருகிறது.

■ நாளையும் மறுநாளும் (அதாவது இன்று ஞாயிறும் நாளை திங்களும்), நிலைமை சாதகமாக இருந்தால், மேலதிக புனருத்தாரண பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

■ முத்தையன்கட்டு குளத்தில் தற்போதுவரை எந்தவித ஆபத்தான நிலையும் இல்லை.

■ குளத்தின் கீழ் பகுதியில் (Downstream) வசிக்கும் பொதுமக்களுக்கு தொடர்ந்து கனமழை இல்லாதபடியால் குளத்தினால் எதுவித ஆபத்தான நிலமையும் இல்லை என்பதனை திணைக்களம் உறுதிப்படுத்துகிறது.

எனவே, பொதுமக்கள் யாரும் அச்சமடைய வேண்டாம்.

தேவையற்ற வதந்திகளை நம்ப வேண்டாம்.





# இரத்தினவேலோனின் 'நினைவழியா நூல்கள்' வெளியீட்டு நிகழ்வு கொழும்பில் இன்று மாலை

புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் "நினைவழியா நூல்கள்" ஜீவநதி வெளியீடு வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் (75, லோறன்ஸ் வீதி) பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை கலந்துகொள்கிறார்.

நூல் வெளியீட்டுரையை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருமதி சுகந்தி இராஜகுலேந்திராவும், வாழ்த்துரைகளை இந்து வித்தியாவிருத்தி சங்கத்





தின் தலைவர் கலாநிதி த.முத்துக்குமாரசாமியும், பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கமும், நூல் நயவுரைகளை எழுத்தாளர்கள் திருமதி பிரமிளா பிரதீபனும், காரைக்கவி கந்தையா பத்மானந்தனும் நிகழ்த்துவர்.




# கடற்றொழில் அமைச்சர் கட்டைக்காட்டிற்கு வருகை

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டிற்கு கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்று விஜயம் மேற்கொண்டார். அங்கு பொதுமக்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களுடைய குறைபாடுகளை அமைச்சர் கேட்டு அறிந்தார்.

கட்டைக்காட்டு மக்களின் அடிப்படை பிரச்சினையாக காணப்படும் கட்டைக்காடு சுண்டிக்குள வீதி புனரமைப்பு மற்றும் கட்டைக்காடு இயக்கச்சி வீதி புனரமைப்பு, வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருக்கும் மக்களின் காணிகள் விடுவித்தல் போன்ற முக்கிய விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்தியன் இழுவை மடி படகுகளால் மீனவர்களுடைய வலைகளும் இப்பகுதியில் பாதிப்படைவது குறித்து அமைச்சர் தனது கவலையை வெளிப்படுத்தினார்.

மக்களுடைய குறைபாடுகளைக் கேட்டு அறிந்த அமைச்சர் இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

மீன்பிடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உற்பத்தி தொழில்களை ஊக்குவிக்க முயற்சித்திருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்

இந்த விஜயத்தின் போது வடமராட்சி கிழக்கு தேசிய மக்கள் சக்தியின் இணைப்பாளர் மற்றும் பிரதிநிதிகள் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





# அனர்த்த நேரத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கு மழை அங்கிகள்



(த.சுபேசன்)

அண்மையில் இடம்பெற்ற அனர்த்த சமயத்தில் மூன்று நாள்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஊழியர்களுக்கு அவர்களின் சேவைகளை பாராட்டும் முகமாக மழை அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

உபதவிசாளர் ஞா.கிஷோரின் ஒழுங்குபடுத்தலில் பிரான்ஸில் வசிக்கும் சுரேஷ் ஆனந்தின் நிதிப்பங்களிப்பில் சுமார் 25 மழை அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நகரசபைத் தவிசாளர் வ.ஶ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உபதவிசாளர் ஞா.கிஷோர், உறுப்பினர் மு.கோகுல்றாஜ், செயலாளர் செ.நிசான், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குணசாந்தன் உட்பட நகராட்சி மன்றின் அதிகாரிகள் கலந்துகொண்டு மழை அங்கிகளை வழங்கி வைத்தனர்.





# நாடாளுமன்றை கூட்டுவதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

நாடாளுமன்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி கூடுவதற்காக அழைப்பு விடுத்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கோரிக்கைக்கமைய, நாடாளுமன்றம் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு கூடவுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# 7 மாவட்டங்களுக்கு விடுத்த மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு



7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருணதகல், கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய 7 மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கண்டி மாவட்டத்துக்கும், குருணாகல் மாவட்டத்தின் ரிதீகம மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கும் விடுக்கப்பட்டிருந்த மூன்றாம் நிலை சிவப்பு மண்சரிவு அபாய அறிவிப்பும் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குத் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த அபாய எச்சரிக்கையானது, இன்று மாலை 4 மணி வரை செல்லுபடியாகும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.



# நுவரெலியாவிலிருந்து பல மாகாணங்களுக்கு 88,000 கிலோ கிராம் மரக்கறிகள் அனுப்பிவைப்பு

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து நாட்டின் பல மாகாணங்களுக்கு நேற்று 88,000 கிலோ கிராம் மரக்கறிகள் கொண்டு செல்லப்பட்டதாக அந்த மத்திய நிலையத்தின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 1 கிலோ கிராம் கோவா 210 ரூபாவிற்கும், 1 கிலோ கிராம் கரட் 230 ரூபாவிற்கும், 1 கிலோ கிராம் லீக்ஸ் 230 ரூபாவிற்கும், 1 கிலோ கிராம் பீட்ரூட் 260 மற்றும் 310 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

அத்துடன் 1 கிலோ கிராம் உருளைக் கிழங்கு 290 ரூபாவிற்கும், 1 கிலோ கிராம் சிவப்பு உருளைக்கிழங்கு 260 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த மரக்கறித் தொகுதிகள் காலி, மாத்தறை, பிட்டிகல, களுத்துறை, அம்பாறை, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளர் குறிப்பிட்டார்.

மொத்த வியாபாரிகளின் கோரிக்கையின் அடிப்படையிலேயே விவசாயிகளிடமிருந்து மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும், தற்போது சந்தையில் மரக்கறிகளுக்கான கேள்வி குறைவாக உள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# டித்வா சூறாவளி பேரிடரில் காணாமல் போன வெளிநாட்டவர்களுக்கும் மரணச் சான்றிதழ்

டித்வா சூறாவளியால் காணாமல் போன வெளிநாட்டவர்களுக்கும் மரண சான்றிதழை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கையும் வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, காணாமல் போன வெளிநாட்டவர்கள் தொடர்பில் அவர்களுடைய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொன்சூலர் நாயகம் அலுவலகம் மற்றும் தூதுவர்கள் ஊடாக, பதிவாளர் நாயகத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்

அந்த விண்ணப்பம் தொடர்பில் பதிவாளர் நாயகத்தினால் விடயங்கள் ஆராயப்பட்டு, தகவல் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் காணாமல் போன வெளிநாட்டவர்களுக்கான மரணச் சான்றிதழ் விநியோகிக்கப்படும் என பதிவாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.



டித்வா சூறாவளியின் பின்னர் பேரிடர் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, 22 மாவட்டங்களில் தங்கி இருந்த வெளிநாட்டவர்களுக்கு மாத்திரமே இந்த நடவடிக்கை பொருந்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதன்படி காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய 22 மாவட்டங்களிலும் தங்கி இருந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு இந்த நடைமுறை அமுலாக்கப்படும் என பதிவாளர் நாயக திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச ஊழியர்களுக்கு 4,000 ரூபா முற்பணம்

## சுற்றறிக்கை வெளியானது



நிரந்தர அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்காக 4,000 ரூபா விசேட முற்பணம் வழங்கும் திட்டமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்றறிக்கையில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விசேட முன்பணத் திட்டம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

நிரந்தர பதவி வகிக்கும் அரச பணியாளர்கள் இந்தப் முன்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் என்றாலும், அவர்கள் வேறு எந்தவொரு கடனுக்கும் (முற்பணம் அல்லது வங்கிக்கடன்) உரித்துடையவர்களாக இருக்கக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த முற்பணத் தொகையானது சமமான பத்து மாத தவணையில் ஆண்டுக்கு 8 வீத வட்டியுடன் அறவிடப்படும்.

அத்துடன், முற்பணம் பெற்றுக் கொண்டதற்குப் பின்னரான மாதத்தின் முதல் திகதியிலிருந்து மீளச் செலுத்துகை ஆரம்பமாகும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிலாபம் மாவட்ட பொது மருத்துவமனை மீண்டும் இயங்க 1,200 மில்லியன் தேவை

நாட்டில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனைக்கு ரூ.1,200 மில்லியனுக்கும் அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதன்படி மருத்துவமனையில் வழமை போல சிகிச்சை சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சுமார் 1,200 மில்லியன் செலவாகும் என அவர் குறிப்பிட்டார்.

அதிதீவிர வானிலையால் பாதிக்கப்பட்ட சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனையின் தற்போதைய நிலைமையை ஆராய விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டபோதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




இதனைத் தொடர்ந்து, குறித்த மருத்துவமனையின் வைத்தியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுடன், சிகிச்சைகளைக் கட்டம் கட்டமாக மீண்டும் ஆரம்பிப்பதற்கான செயற்திட்டம் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடியதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

# தற்போதைய தருணம் மக்களுக்கானது; அரசியலுக்கானதல்ல என்கிறார் நாமல்



பிரதமர் ஹரிணி அமரசூரிய சபாநாயகரைக் கோரி நாடாளுமன்றத்தைக் கூட்ட எடுத்த முடிவை நான் மனதார வரவேற்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிடுகையில்,


"வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நான் பார்வையிட்டபோது, கடந்த சில நாள்களாக தமது வீடுகளையும், வாழ்வாதாரத்தையும், ஏன் உணவு மற்றும் சுத்தமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளையும் கூட இழந்த குடும்பங்களைச் சந்தித்தேன்.

இந்தச் சூழலில், ஒவ்வொரு சமூகத்தையும் உதவி சென்றடைவதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இப்போது நாடாளுமன்றத்திற்கு உள்ளது.

இந்தத் தருணம் அரசியலைப் பற்றியதல்ல, மக்களைப் பற்றியது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்."

எனக் குறிப்பிட்டுள்ளார்.

# டிசம்பர், ஜனவரியில் தாழமுக்கம் உருவாகும்



வடகிழக்கு பருவப்பெயர்ச்சி காற்று வலுவடைந்துள்ள நிலையில், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலங்கள், தாழமுக்கங்கள் உருவாகலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனர்த்தமுகாமைத்துவமத்தியநிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சம்பத் கொட்டுவேகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளில் வட,கிழக்கு பருவப்பெயர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் குறித்த தரவுகளை ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் ஊடாக இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, வட மாகாணத்தில் சாதாரண மழைவீழ்ச்சியை விட அதிக மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சாதாரண மழைவீழ்ச்சியை அண்மித்த மழை பெய்யக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் சாதாரண மழைவீழ்ச்சியை விடக் குறைவான மழைவீழ்ச்சியே நிலவும் கணிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலங்கள் உருவாகும் பட்சத்தில், இந்த வானிலை முன்னறிவிப்புகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

# அகற்றப்படாத குப்பைகளால் நோய்கள் பரவும் அபாயம்







**(மரியசீலன்-திலைக்ஸ்ஸ்ர்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடற்கரை வீதிகளில் குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன என பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய "டித்வா" புயலால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அதிக காற்று வீசியிருந்தது

இதன் காரணமாக வெள்ள நீருடன் குப்பைகள் வீதிகள் மற்றும் குடிமனைகளுக்குள் அடித்துவரப்பட்டு குப்பைக்காடாக காணப்படுகின்றது

வடமராட்சி கிழக்கு கடற்கரை வீதியில் பயணிக்க முடியாத நிலையில், குப்பைகள் தேங்கியுள்ளன. இதனால் அருகில் வசிக்கும் குடும்பங்கள் டெங்கு நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இது தொடர்பில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.



# ஆபரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்கிறது: முப்படை தலைமை தளபதி சவுகான் கருத்து

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக்கொள்ள இந்தியப் பாதுகாப்பு படைகள் உறுதிபூண்டுள்ளன என முப்படை தலைமைத் தளபதி அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா மாநிலம் துண்டிகல் அருகே உள்ள விமானப் படை அகாடமியில் நடைபெற்ற 216 ஆவது பயிற்சிப் பிரிவின் ஒருங்கிணைந்த பட்டமளிப்பு அணிவகுப்பில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய சவுகான்,

“போர் மற்றும் போரிடும் செயல்முறை தற்போது ஒரு பெரிய புரட்சியின் விளிம்பில் உள்ளது. இந்த நிலையில், இந்திய பாதுகாப்புப் படைகள் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொள்வதற்கும், சீர்திருத்தங்களை உள்வாங்கிக் கொள்வதற்கும் உறுதிபூண்டுள்ளன.

இந்தியாவின் வலிமையானது உறுதியான நிறுவனங்கள், ஜனநாயக நிலைத்தன்மை மற்றும் நமது ஆயுதப்படைகளின் அசைக்க முடியாத திறனைச் சார்ந்து உள்ளது. நமது பாதுகாப்புப் படை செயல்பாடுகளின் தீவிரம் குறைந்திருக்கலாம். ஆனால், ஒபரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்கிறது. புதிதாகப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் ஆயுதப் படைகளின் ஆழமான மாற்றத்தின் ஒரு காலகட்டத்தில் இந்திய விமானப்படையில் நுழைகிறார்கள்.

ஒருங்கிணைந்த கட்டமைப்புகள், கூட்டு நடவடிக்கைகள் மற்றும் தேசத்தின் தற்சார்பு இந்தியா முயற்சி ஆகியவை நமது ராணுவ வலிமையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய கூறுகளாக உள்ளன.

பழைய களங்களில் நடைபெறும் போர்கள் எப்போதும் சவாலானவையாகவும், பெரும்பாலும் கொடூரம் நிறைந்தவையாகவும் இருக்கும்.

ஆனால், புதிய களங்களில் போர்கள் என்பது புத்திசாலித் தனமானவை யாகவும், வேகமானவையாகவும், அறிவு, புதுமை மற்றும் முன்முயற்சியால் வடிவமைக்கப் பட்டவையாகவும் இருக்கும். இந்த புதிய எல்லைகளில் தேர்ச்சியுறும் படைதான் எதிர்கால மோதல்களில் வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

# லியோனல் மெஸ்ஸியை ராகுல் காந்தி சந்தித்தார்



அர்ஜெண்டினா அணியின் உதைபந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி கோட் இந்தியா டூர் என்ற பெயரில் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த மூன்று நாள்கள் சுற்றுப் பயணத்தின் இரண்டாவது நிகழ்வு, நேற்று சனிக்கிழமை ஹைதராபாத்தில் நடைபெற்றது.

ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடந்த இந்த நிகழ்வில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அங்கு அவர் மெஸ்ஸியை சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பின்போது, தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியும் உடன் இருந்தார்.

இந்த நிகழ்வில், மெஸ்ஸி தனது அன்பின் அடையாளமாக, அர்ஜெண்டினா அணியின் ஜெர்சி ஒன்றை ராகுல் காந்திக்கும், ரேவந்த் ரெட்டிக்கும் பரிசாக வழங்கினார். பதிலுக்கு ராகுல் காந்தியும், ரேவந்த் ரெட்டியும் மெஸ்ஸிக்கு நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்தனர்.

மெஸ்ஸியும், அவரது இன்டர் மியாமி அணி வீரர்களான லூயிஸ் சுவாரஸ், ரோட்ரிகோ டி பால் ஆகியோரும் மைதானத்தில் இருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களிடம் கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு குறித்து, ராகுல் காந்தி தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் புகைப்படங்களையும், காணொலிகளையும் பகிர்ந்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# கேரள உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்கு அமோக வெற்றி



கேரள மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் வெளியாகி உள்ளன. இதில் கொச்சி, கொல்லம், திருச்சூர், கண்ணூர் ஆகிய 4 மாநகராட்சிகளை காங்கிரஸ் தலைமையிலான யு.டி.எஃப் கூட்டணியும், கோழிக்கோடு மாநகராட்சியை இடதுசாரி ஜனநாயக கூட்டணியும், திருவனந்தபுரம் மாநகராட்சியை பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் வென்றுள்ளன. இது, என்.டி.ஏ. கூட்டணிக்கு திருவனந்தபுரம் மாநகராட்சியில் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும்.

கேரள மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் ஆளும் இடதுசாரி ஜனநாயக கூட்டணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில் 4 மாநகராட்சிகளில் வென்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு இது அமோக வெற்றி என அந்த கட்சியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கேரள மாநிலத்தில் மொத்தம் 1,199 உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெற்றது. கடந்த 9ஆம் திகதி திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, கோட்டயம், இடுக்கி, ஆலப்புழா, எர்ணாகுளம் பகுதிகளிலும், 11 ஆம் திகதி அன்று திருச்சூர், மலப்புரம், வயநாடு, பாலக்காடு, கண்ணூர், காசர்கோடு, கோழிக்கோடு உள்ளிட்ட பகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 73.69 சதவீத வாக்குகள் இதில் பதிவானது.

இந்த தேர்தல் முடிவுகள் எல்.டி.எஃப் கூட்டணியின் இழப்பு, காங்கிரஸ் கூட்டணியின் ஆதாயமாக அமைந்துள்ளதாக பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில் தேர்தல் பரப்புரையில் என்.டி.ஏ. கூட்டணி அளித்த வாக்குறுதிகள் காரணமாக கேரள தலைநகரான திருவனந்தபுரம் மாநகராட்சியை அந்த கூட்டணி வென்றுள்ளது.

நிச்சயம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என அந்தக் கூட்டணி கட்சியை சேர்ந்தவர்கள் வெற்றிக்கு பிறகு தெரிவித்தனர். திருவனந்தபுரம் மாநகராட்சியில் மொத்தம் 50 இடங்களில் என்.டி.ஏ. கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

# ஒரே நேரத்தில் 2,000 ஏவுகணைகளை ஏவுவதற்குத் திட்டமிடுகின்றது ஈரான்

## இஸ்ரேல் எச்சரிக்கை

ஒரே நேரத்தில் 2,000 ஏவுகணைகளை ஏவுவதற்கு ஈரான் திட்டமிட்டு வருவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் அதிகாரிகள் வெளியிட்ட தகவலின்படி, ஈரான் தனது பாலிஸ்டிக் ஏவுகணை உற்பத்தியை மிக வேகமாக மீண்டும் தொடங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரில் இஸ்ரேல் தாக்குதலால் பல உற்பத்தி நிலையங்கள் சேதமடைந்திருந்தாலும், தற்போது ஈரான் "24 மணி நேரமும் இயங்கும் தொழிற்சாலைகள்" மூலம் தனது திறனை மீட்டெடுத்துவருகிறது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு விவகாரக் குழுவில் நடைபெற்ற ரகசிய கூட்டத்தில், உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர், "ஈரான் எதிர்கால மோதலில் ஒரே நேரத்தில் 2,000 ஏவுகணைகளை ஏவத் திட்டமிடுகிறது" என எச்சரித்துள்ளார்.

மேற்கு நாடுகளின் தூதர்கள், ஈரான் தனது திட எரிபொருள் உற்பத்தி திறனை விரைவாக மீட்டெடுக்க முயற்சிக்கிறது எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, இஸ்ரேல் planetary mixers எனப்படும் முக்கிய உற்பத்தி கருவிகளை தாக்கியதால், ஈரான் பழைய முறைகளைப் பயன்படுத்தி எரிபொருள் தயாரிக்கிறது.

International Crisis Group இன் ஈரான் திட்ட இயக்குநர் அலி வாஏஸ், "ஈரான் தனது ஏவுகணை திறனை விரைவாக மேம்படுத்துகிறது. இது, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்புகளை ஒரே நேரத்தில் தாக்கி அதிக சுமையால் செயலிழக்கச் செய்யும் நோக்கத்துடன் உள்ளது" எனக் கூறியுள்ளார்.







# உதைபந்தாட்ட வீரர் மெஸ்ஸியின் கௌரவமளிப்பு நிகழ்வில் குழப்பம்

உதைபந்து வீரர் லியோனல் மெஸ்ஸியின் வருகைக்காக இந்தியாவின் கொல்கத்தா சால்ட் லேக் மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவ நிகழ்வு, கட்டுப்பாடற்ற கூட்டத்தினால் குழப்பத்தில் முடிவடைந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால், ரசிகர்கள் சீற்றமடைந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மெஸ்ஸி, குறித்த நேரத்தில் சால்ட் லேக் மைதானத்துக்கு வந்தடைந்தார். மைதானத்தின் அருகில் அவரது வாகனம் நிறுத்தப்பட்டது. அவர் வெளியேறிய சில நிமிடங்களில், பிரபலங்கள், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், ஏற்பாட்டாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத நபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, திட்டமிடப்பட்ட பாதுகாப்பு விதிகளை மீறியமையால் இந்த குழப்ப நிலை ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

மெஸ்ஸியின் உத்தியோகபூர்வ குழுவில் இல்லாதவர்கள் மைதானத்தை விட்டு வெளியேறுமாறு ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி மூலம் பலமுறை அறிவித்த போதிலும், அந்த எச்சரிக்கைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன.

இந்தநிலையில், மைதானத்தில் இருந்த கூட்டம் முன்னோக்கிச் சென்றதுடன், பலர் புகைப்படம் எடுக்கவும் கையெழுத்து பெறவும் முயன்றதால், நிலைமை மேலும் பாதுகாப்பற்றதாக மாறியது.

“மெஸ்ஸி, மெஸ்ஸி” என்ற கோஷங்கள் அரங்கில் எதிரொலிக்க, மெஸ்ஸி மைதானத்தில் ஒரு குறுகிய தூரம் நடந்து சென்று பார்வையாளர்களைப் பார்த்துச் கைகளை அசைத்தார் என கூறப்படுகின்றது.

இருப்பினும், கூட்டத்தின் அழுத்தம் தீவிரமடைந்து, நிலைமை கட்டுப்பாட்டை மீறுவது போல் தோன்றியதால், அவர் கூட்டத்தின் அருகில் இருந்து திரும்பிச் சென்றார்.

மெஸ்ஸி மிகச் சுருக்கமான நேரமே வந்து, மைதானத்தில் ரசிகர்களுடன் உரையாடாமல் சென்றதையடுத்து, மோசமான திட்டமிடல் குறித்து ஏற்பாட்டாளர்களைக் குற்றம் சாட்டி, மைதானத்தில் ஆத்திரமடைந்த ரசிகர்கள் போத்தல்களை வீசியதுடன், சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அனுமதி சீட்டுக்கள் மற்றும் பயணத்திற்காகப் பெருந்தொகை செலவழித்தும், மெஸ்ஸியைச் சரியாகப் பார்க்க முடியவில்லை என்று ரசிகர்கள் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.









# இன்றைய ராசி பலன்கள்- 14.12.2025




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமையாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம். அமைதியாக இருந்து பிரார்த்தனை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் பதற்றமான மனநிலையில் இருப்பீர்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்கவைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் சிறப்பாக சமாளிக்கலாம்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

# இன்றைய ராசி பலன்கள்- 14.12.2025




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத் திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணபபடும். உங்களின் மாறுபாடற்ற மன நிலை காரணமாக நீங்கள் திறமை யான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற் கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.



# பத்திரிகையாளருக்கு மருத்துவத்துக்கு உதவி

யாழ் ஊடக அமையத்தின் ஆரம்ப கால உறுப்பினரும் சிரேஷ்ட பத்திரி கையாளருமான பாலசிங்கம் பார்த்தீப னின் மருத்துவ செலவுக்காக நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் ஊடக அமையம் மற்றும் யாழ் ஊடக அமையம் ஆகியன இணைந்து ஒரு தொகை நிதியை வழங்கி வைத்தனர்.

கிளிநொச்சி முரசுமோட்டையில் உள்ள ஊடகவியலாளரின் இல்லத்துக்கு சென்ற யாழ் ஊடக அமைய பிரதிநிதிகள் குறித்த நிதியுதவியை நேரடியாக வழங்கி வைத்தனர். இவர் ஈழநாதம் பத்திரிகையில் 1992ம் ஆண்டு முதல் ஊடகவியலா ளராகவும், இறுதி யுத்த காலப்பகுதிகளில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.